7390

உ

கடவுள்துணை.

திருமூலர் திருவாய்மலர்ந்தருளிய

# வேதாந்தத்

# தத்துவக்கட்டளை.

289 THUMBOO CHETTY ST. MADRAS

இஃது

ஸ்ரீ-புஷ்பரதசெட்டி

அண்டு கம்பினியாரால்

கலாரத்நாகரம்

என்னும் தமது அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்.

1895.

35 1983

உ

சிவமயம்.

# அறிவிப்பு.

இப்புத்தகம் சென்னைபட்டணம் முத்தி
லுபேட்டை தம்புசெட்டியார் வீதியில் 2'
கதவிலக்கமுள்ள கலாரத்நாகரம் என்
அச்சுக்கூடத்தில் விற்கப்படும்.

புத்தகம் ௧-க்கு அணா - ௨.
தபாற்செலவு ,, - ௨.

12-புத்தகங்கள் அரை அணா தபால் (
திரையில் அனுப்பக்கூடும்.

☞ இதைப்போலவே சிறு புத்தக
தெளிவுபெற நாநாசீவவாதக்கட்டளை (
லிய சில கட்டளைகளும், வேதாந்த ப
சேதம் என்னும் நூலும் விரைவில் வெ
யிடப்படும்.

உ

சிவமயம்.

# வேதாந்தத்

# தத்துவக்கட்டளை.

## காப்பு.

ைதாயாவானுஞ்சார்கதியிங்காவானு
தமிலாவின்பஃமக்காவானு - மெந்தமுயிா
ஞுருவானுஞ்சரஞுருவானுமருட்
ா ஞுருவானுங்குரு.

---

### தத்துவங்கள் — ௯௬.

இவை முதற் றத்துவம் - ௩௦ ரண்டாந் தத்துவம் - ௩௦, மூன்றாந் த்துவம் - ௩௬, எனப் பிரிக்கப் ட்டு வழங்கும்.

### முதற்றத்துவம்—௩௦.

| | |
|---|---|
| பூதம் | ௫ |
| பொறி | ௫ |
| புலன் | ௫ |
| கன்மேந்திரியம் | ௫ |
| கன்மவிஷயம் | ௫ |
| கரணம் | ௪ |
| அறிவு | ௧ |
| ஆக | ௩௦. |

### இரண்டாந்தத்துவம்—௩௦.

| | |
|---|---|
| நாடி | ௧௦ |
| வாயு | ௧௦ |
| சயங்கள் | ௫ |
| கோசம் | ௫ |
| ஆக | ௩௦. |

### மூன்றாந்தத்துவம்—௩௬.

| | |
|---|---|
| ஆதாரம் | ௬ |
| மண்டலம் | ௩ |
| மலம் | ௩ |
| தோஷம் | ௩ |

| | |
|---|---|
| ஏடணை * | ௩ |
| குணம் | ௩ |
| இராகம் | அ |
| வினை | உ |
| அவஸ்தை | ௫ |
| | ஆ ௩௬. |

## முதற்றத்துவம் ௩௦-ன் வரலாறு.

### பூதம்—௫.

| | |
|---|---|
| ிருதிவி | = மண் |
| ப்பு | = நீர் |
| தயு | = அக்கினி |
| ாயு | = காற்று |
| காயம் | = சுத்தவெளி |

### பொறி—௫.

| | |
|---|---|
| சாத்திரம் | = செவி |
| துாக்கு | = உடம்பு |

* ஈஷணு என்னும் இச்சைப் பொருட் ான வடமொழியானது, விதிவழியே ஜகார ருய் ஈடணை என நின்று மரூஉ வழக்கால் —ணை என வழங்குகின்றது.

சட்சு = கண்
சிகுவை = நாக்கு
ஆக்கிராணம் = மூக்கு

புலன்—௫.

சத்தம் = கேட்கப் பட்டது [செவ
குயிர்க்கூறு]
பரிசம் = சுகதுக்க வறிவு [உட
குயிர்க்கூறு]
உருவம் = காணப்பட்டது [கண்
குயிர்க்கூறு]
இரசம் = அறுசுவை யறிவு [ந
குயிர்க்கூறு]
கந்தம் = நற்கந்த துர்க்கந்த வ
[நாசிக் குயிர்க்கூறு.]

கன்மேந்திரியம்—௫.

வாக்கு = வாய்
பாதம் = கால்
பாணி = கை
பாயுரு = அபானம்
உபத்தம் = குறி.

## கன்மவிஷயம்—௫.

| | |
|---|---|
| ...சனம் | = வார்த்தை [வாய்க் குயிர்க்கூறு] |
| | = நடை [காலுக் குயிர்க்கூறு] |
| ...ரனம | = கொடுத்தல் வாங்கல் [கைக் குயிர்க்கூறு] |
| ...சர்க்கம் | = விடுதல் [அபானத்துக் குயிர்க்கூறு] |
| ...தம் | = மகிழ்தல் [குறிக் குயிர்க்கூறு.] |

## கரணம்—௪.

| | |
|---|---|
| ...ம் | = ஒன்றை நினைப்பது |
| ...தி | = ஒன்றை விசாரிப்பது |
| ...ங்காரம் | = ஒன்றைக்கொண் டெழுப்புவது |
| ...தம் | = ஒன்றைச் செய்து முடிப்பது. |

## அறிவு—௧.

| | |
|---|---|
| ...றிவு | = உள்ளந் தன்னைக்கண்டு மகிழ்ந்திருத்தல். |

ஆ முதற்றத்துவம் - ௩0.

## இரண்டாந்தத்துவம் ௯0-ன் வாலாறு

நாடி—௧0.

| | |
|---|---|
| இடை | = வலதுகாற் பெருவிரலினி ன்று கத்தரிக்கோல் மாறலாக இடது நா யைப்பற்றி நிற்பது. |
| பிங்கலை | = இடதுகாற் பெருவிரலின் ன்று கத்தரிக்கோல் பே மாறலாக வலது ந யைப்பற்றி நிற்பது. |
| சுழுமுனை * | = மூலாதாரத்தைத் தொட து எல்லா நாடிக்கும் தாரமாய் நடுநாடியா சிரசளவு முட்டிநிற்ப. |
| சிகுவை | = உண்ணாக்கிலே நின்று று தண்ணீர் இரை விழுங்கப்பண்ணுவது |

* சுஷும்நா என்னும் வடமொழி முனை எனற்பாலது விதிகடந்து வழக்காய்ச் சுழுமுனை என்றும், வழூஉ காய்ச் சுழிமுனை என்றும் வழங்கும்.

ருடன் = வலது கண்ணளவாய் நிற்பது.

காந்தாரி = இடது கண்ணளவாய் நிற்பது.

த்தி = வலது காதளவாய் நிற்பது

லம்புடை = இடது காதளவாய் நிற்பது

ங்கினி = குறியினளவாய் நிற்பது

கு = அபானத்தளவாய் நிற்பது.

## வாயு—க0.

| | |
|---|---|
| பிராணன் | நாகன் |
| அபானன் | கூர்மன் |
| வியானன் | கிருகரன் |
| உதானன் | தேவதத்தன் |
| சமானன் | தனஞ்சயன். |

இவற்றுள்:—

க. பிராணன் = லலாட மத்தியிற் றேனே
றிச் சித்திர நாடியில் விழுந்து, ஓவ்
சு என்று மூலாதாரத்திற் குதித்து, அவ்
ரு என்று நாபித்தானத்தில் முட்டி, சவ்
என்று இடைபிங்கலைகளி லோடி,
கபாலத்தைச் சுற்றி, நாசியிற் பன்னி

ரண் டங்குலம் புறப்பட்டு, நாலங்
குலங் கழன்று எட்டங்குலம் மீண்டு
தானின்ற விடத்திற் குறுக்குறுவது
இப்படி நாழிகை ஒன்றுக்கு ௩௬0
சுவாசம்; இரவுபகல் ௬0 - நாழிகைக்
கும் உக,௬00-சுவாசம்.

இந்தச் சுவாசம் உக,௬00-க்கும் விவரம்.

| | |
|---|---|
| மூலாதாரத்திற்குச் சுவாசம் | ௬00 |
| பிருதிவியில் சுவாதிஷ்டானம் பிரமாவினிடஞ் சுவாசம் | ௬000 |
| அப்புவின் மணிபூரகம் விஷ்ணுவினிடஞ் சுவாசம் | ௬000 |
| தேயுவில் அனுகதம் உருத்திரனிடஞ் சுவாசம் | ௬000 |
| வாயுவில் விசுத்தி மயேச்சுரனிடஞ் சுவாசம் | ௧000 |
| ஆகாசத்தி லாஞ்ஞை சதாசிவனிடஞ் சுவாசம் | ௧000 |
| நாதாந்தத்தில் தட்சிணா மூர்த்தியினிடஞ் சுவாசம் | ௧000 |

ஆக உக,௬00 - சுவாசமியங்கி, இதில் எ,உ00-சுவாசம் பாழாகப் பாய்ந்து கச,௪00 - சுவாசம் உள்ளே புகும் என்று அறியவும்.

அபானன் = குதத்தையுங் குய்யத்தை யும் பற்றி நின்று மல சலாதிகளைக் கழிப்பிப்பது.

வியானன் = தோலிலே நின்று பரிசங் களை அறிவிப்பது.

உதானன் = உதராக்கினியை எழுப்பி உண்ட அன்னசாரத்தை எஉ,000 நாடி நரம்புகளிலே கலப்பித்துச் சரீ ரத்தை வளர்ப்பிப்பது.

ரு. சமானன் — எல்லா வாயுவையும் ஏறு தல் குறைதல் செய்யவொட்டாமற் சமனாய்க் கீழ்கொண் டியங்குவது.

௬. நாகன் = விக்கலுங் கக்கலும் உண்டாக் குவது.

௭. கூர்மன்=கண்ணிலேநின்று இமைப்பது.

அ. கிரிகரன் = புருவமத்தியத்தைப் பற்றி நின்று தும்முவித்தலும் அழுவித்தலுஞ் செய்வது.

௯. தேவதத்தன் = விழித்திருக்கும்போது ஓடுவித்தலும், உலாவுவித்தலும், உயுத்தம் பண்ணுவித்தலுஞ் செய்வது.

௧௦. தனஞ்சயன்=பிராணன் உடம்பை விட்டுப் போனாலும் தான் பிரியாமல் நின்று உடம்பை வீங்குவித்தலும் விரிவித்தலும், புளிப்பித்தலுஞ் செய்து, மூன்றுநாட் கப்பால் கபாலத்தைப் பிளந் தோடிப் போவது.

## சயம்—௫.

அமர்வாசயம்

பகிர்வாசயம்

சலவாசயம்

மலவாசயம்

சுக்கிலவாசயம்.

௧. அமர்வாசயம்=உண்ட அன்னசாரம் அமருமிடம்.

பகிர்வாசயம்=அன்னம் பகிருமிடம்.

யம்=சலக்குழி இறங்கு

யம்=மலக்குழி இறங்கு

வாசயம்=சுக்கிலம் பிரி

## கோசம்—ரு.

அன்னமயகோசம்
பிராமயகோசம்
மனோமயகோசம்
விஞ்ஞானமயகோசம்
ஆனந்தமயகோசம்.

அன்னமயகோசம் = சட்பாவ விகாரமாகத் தோற்றப்பட்ட தூலதேகம்.

பிராணமயகோசம் = பிராணனுங் கன்மேந்திரியமுங் கூடிநிற்பது.

மனோமயகோசம் = மனதுங் கன்மேந்திரியமுங் கூடிநிற்பது.

விஞ்ஞானமயகோசம் = புத்தியும் ஞானேந்திரியமுங் கூடிநிற்பது.

௫. ஆனந்தமயகோசம் = பிராண வாயுவுஞ்
* சுழுத்தியுங் கூடிநிற்பது.

ஆக இரண்டாந்தத்துவம் : ௩0

---

## மூன்றாந்தத்துவம் ௩௬-ன் வரலாறு.

ஆதாரம்—௬.

மூலாதாரம்
சுவாதிஷ்டானம்
மணிபூரகம்
அனாகதம்
விசுத்தி
ஆஞ்ஞை.

௧. மூலாதாரம் = நாற்சதுரத்துக் குள்ளே முக்கோணமா யிருப்பது; இதனுள் வெளிநிற்கும் எழுத்து ஓங்காரம் இதில் நிற்குந் தேவதை விநாயகன்.

---

* ஸுஷுப்தி என்னும் வடமொழி சுழுத்தி என மருவி நின்றது.

உ. சுவாதிஷ்டானம் = நாற்கோணமாயது. இதனடுவே நிற்கும் அக்கரம் நகாரம்; அதிதேவதை பிரமா.

ந. மணிபூரகம் = பிறைக்கோண மாயது; இதனடுவேநிற்கும் எழுத்து மகாரம்; அதிதேவதை விஷ்ணு.

ச. அநாகதம்=முக்கோணமாயது; இதனடுவே நிற்கும் எழுத்துச் சிகாரம்; அதிதேவதை உருத்திரன்.

ரு. விசுத்தி=அறுகோணமாயது; இதில் நிற்கும் எழுத்து வகாரம்; அதிதேவதை மகேசுவரன்.

சா. ஆஞ்ஞை = வட்டமாயிருப்பது. இதனடுவே நிற்கும் எழுத்து யகாரம்; அதிதேவதை சதாசிவன்.

இப்படி ஆதாரம் ஆறிலேயும், ஆறெழுத்தும், ஆறு தெய்வமும், ஆறு வீடும், அதில் ஐம்பத்தோ ரக்ஷரமுங் கண்டுகொள்க.

## மண்டலம்—ந.

அக்கினிமண்டலம்
ஆதித்தமண்டலம்
சந்திரமண்டலம்.

க. அக்கினிமண்டலம் = நாற்சதுரமாய் நடுவே மூன்று கோணமாய்ப் பிருதிவியும் அப்புவுங் கூடின விடத்தே நாலிதழுடைய புஷ்பமா யிருப்பது.

உ. ஆதித்தமண்டலம் = இருதய கமல அறுகோண மெட்டிதழுடைய புஷ்பமாய் வாழைப் பூப்போன்று கீழ்நோக்கி யிருப்பது.

ந. சந்திரமண்டலம் = கோடி சந்திராதித்துருதயம் ஆனாற்போலச் சிரசு நடுவே ஓவ் என்ற அக்கரத்தை முன்னிட்டுப் பேதித்து இந்த அமிர்தகலை அக்கினி மண்டலத்தை மேனோக்கிச் சோதியாய் இதனடுவே பராசத்தி எழுந்தருளி யிருப்பது.

## மலம்—ங.

ஆணவம்
காமியம்
மாயை.

க. ஆணவம்=உடம்பை நானென் றிருக்கை.

உ. காமியம் * = கண்டதுக்கெல்லாமாசைப் படுகை.

ங. மாயை = தனக்கு வருவதை யறியாமற் கோபங்கொண் டிருக்கை.

## தோஷம்—ங.

வாதம்
பித்தம்
சிலேத்துமம்.

வாதம் =வாயுவின் கோபம்.
பித்தம் =அக்கினியின்கோபம்.

---

* கார்மியம் என்னுங் கர்மசம்பந்தத்தை உணர்த்தும் வடமொழி சேரபலோயப்பட்டு காமியம் என மருவிற்று.

சிலேத்துமம் * = அப்புவின்கோபம்.

இந்த மூன்றுகோபத்தாற் சகலவியாதியு முண்டு.

ஏடணை—௩.

அத்தவேடணை
புத்திரவேடணை
உலகேடணை.

அத்தவேடணை = திரவியத்தைத்தேடி ஆசைப்படுதல்.

புத்திரவேடணை = புத்திரனைத்தேடி ஆசைப்படுதல். இதை ஒழித்துக் களத்திரவேடணை என்றுங் கூறுவதுண்டு.

உலகேடணை = ஊருங்காணியுந்தேடி ஆசைப்படுதல்.

குணம்—௩.

இராசதம்
தாமதம்
சாத்துவீகம்.

---

* சிலேஷ்மம் என்னும் வடமொழி சிலேட்டுமம் எனற் பாலது, விதிகடந்து சிலேத்துமம் என மருவிற்று.

இராசதம் = அகங்காரமாய் மத்திம குணத்தனா யிருத்தல்.

தாமதம் = உன்மத்தனாய் மத்திமகுணத்தனா யிருத்தல்.

சாத்துவீகம் = யாருக்கும் நல்லவனாய் ஞானகுணத்தனா யிருத்தல்.

## இராகம்—அ.

| | |
|---|---|
| காமம | மதம |
| குரோதம் | மாற்சரியம் |
| உலோபம் | இடும்பை |
| மோகம் | அகங்காரம். |

காமம் = ஆசை.

குரோதம் = பிணக்கு.

உலோபம் = பிடிபாடு.

மோகம் = பிரியம்.

மதம் = கெருவம்.

மாற்சரியம் = உறவாயும் உதட்டில் நகைப்புமாயிருந்து உட்பகை விளைவித்தல்.

இடும்பை = உதாசீனம்.

அகங்காரம் = கோபித்தல்.

## வினை—உ.

நல்வினை.

தீவினை.

நல்வினை = புண்ணியஞ்செய்தல்.
தீவினை = பாவஞ்செய்தல்.

## அவஸ்தை—ரு.

சாக்கிரம்
சொற்பனம்
சுழுத்தி
துரியம்
துரியாதீதம்.

சாக்கிரம் = லலாடத்தானம்.
சொப்பனம் = கண்டத்தானம்.
சுழுத்தி = இருதயகமலம்.
துரியம் = நாபீகமலம்.
துரியாதீதம் = குறியிடம்.

முன்சொல்லிய சாக்கிரமாகிய லலாடத் தானத்திற் சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம்,

ஆனந்தம், மனம், புத்தி, அகங்காரம், சித்தம், இப்பதினாறு கருவிகளுடன் தன்னுடைய சந்நிதியிற் சேவிக்கத்தக்கதாகப் பராசத்தியருளா‌ல் இராசாவும் படையும்போல நிற்கும்.

இதற்குச்சாட்சி

திருமந்திரம்.

கண்டவைந்துங் கலந்தனவோரைந்து
முண்டனநான்கு மோதியுணர்ந்தபின்
பண்டையறுதி பகர்ந்தவிச்சாக்கிர
மண்டமதாக வமர்ந்திருந்தானே.

இப்பால் முன்சொன்ன பதினாறு கருவியிலே பத்துமொடுங்கிநின்ற நான்குகரணமுஞ் சொப்பனமாகிய கண்டத்தானத்தி னிற்கும்போது கனவுகண்டு மறந்துவிட்டே னென்றறியவும்.

இதற்குச்சாட்சி

திருமந்திரம்.

பண்டுமொழிந்த பதினாறுந்தன்னிலே
கண்டமதனிற் கரணங்கலந்துதான்

மண்டிவளைந்த மனைவாழ்க்கைதன்னிலே
கண்டுமறிந்துங் கனவதுவாமே.

முன்சொன்ன கரணம் நான்கில் இரண்டு மொடுங்கி இரண்டும் வந் திருதய கமலத்தி லே நின்றதென் றறியவும்.

இதற்குச்சாட்சி

திருமந்திரம்.

ஆனமனமு மறிகின்றபுத்தியு
மோனையிழந்துநின் றுள்ளேயுயிர்ப்பெய்தித்
தானமிழந்து தயங்கியவாறுபோல்
ஞானமிழந்து சுழுத்தியதாமே.

துரியமாவ திரண்டி லொன்றொடுங்கி ஒன் றுபோய் நாபீகமலத்தி னிற்குமென் றறிய வும்.

இதற்குச்சாட்சி

திருமந்திரம்.

கானத்தெழுந்து கிரியுந்துரியந்தான்
வானத்தெழுந்துபோய் வையம்பிராக்கித்தே
தானத்தெழுந்த கருத்தின்றலையிலே
பூனைத்தவிர்ந்துமங் கோங்கிநின்றனே.

துரியாதீதங் கெட்டவிடத்தில் ஆன்மா
மலாதாரத்திற் கிடந் துறங்குமென் றறிய
ம். முன்சொன்ன பதினாலு கருவியு மிறந்த
ிட்ட

இதற்குச்சாட்சி

திருமந்திரம்.

துரியமிருப்பது சாக்கிரத்துள்ளே
நரிகள்பதினாலு நஞ்சுண்டுசெத்தது
பரியபுரவியும் பாரிற்பிறந்திடந்
துரியமிருப்பிடஞ் சொல்லவொண்ணாதே.

ஆ மூன்றாந்தத்துவம் - ௩௬.

இதற்குச்சாட்சி

திருமந்திரம்.

றப்பதுமுப்பது முப்பத்தறுவருஞ்
செப்புமதிலுடைக் கோயிலுள்வாழ்பவர்
செப்புமதிலுடைக் கோயில்சிதைந்தபி
ஒப்பிலனைவரு மோட்டெடுத்தாரே.

வேதாந்தத் தத்துவக்கட்டளை
முற்றிற்று.

# விளம்பரம்.

| | A. | P. |
|---|---|---|
| விநாயகரகவல் - இரட்டைமணிமாலை | 0 | 3 |
| விநாயககவசம் - சிவகவசம் - சத்திகவசம்-சரஸ்வதிதோத்திரம் இலக்ஷுமிதோத்திரம். | | 0 |
| வேழமுகம் - உலகநீதி ... ... | 0 | 6 |
| அருணகிரிநாதர் வகுப்புகள் .. | 0 | 6 |
| கந்தரலங்காரம் ... ... ... | 1 | 0 |
| கந்தரனுபூதி ... ... ... | 0 | 6 |
| திருமுருகாற்றுப்படை ... ... | 0 | 6 |
| வேல்விருத்தம்-மயில்விருத்தம் ... | 0 | 6 |
| முருகரந்தாதி ... ... ... | 0 | 6 |
| கந்தர் சஷ்டிகவசம் ... ... | 0 | 6 |
| கந்தர் கலிவெண்பா .. ... | 0 | 6 |
| சுந்தரர்வேடுபறி-பஞ்சரத்னத் திருப்புகழ். | 0 | 9 |
| திருத்தொண்டத்தொகை - போற்றிக்கலிவெண்பா. | 0 | 6 |
| நமச்சிவாயமாலை ... ... ... | 0 | 6 |
| சரஸ்வதியந்தாதி ... ... ... | 0 | 6 |
| வராகிமாலை ... ... ... | 0 | 6 |
| கபிலரகவல் ... ... ... | 0 | 6 |
| விநாயகரகவல்முதலிய 17 - புத்தகங்களும் ஒன்றாகக் கட்டியது. | 8 | 0 |